# உங்கள் பணத்தை சிக்கனப்படுத்த வேண்டுமா? உங்கள் வீட்டுக் கழிவுகளை பிரத்தியேகமாக வகைப்படுத்துங்கள்.

ஜனவரி 2012 லிருந்து வீட்டுக் கழிவுப் பொருட்கள் அகற்றலானது கழிவுப் பைக்கான வரி அறவிடும் திட்டத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வீட்டுக் கழிவுப் பொருட்களை எரித்துச் சாம்பலாக்குவதன் மூலம் கழிவுப் பொருட்களைக் குறைக்கலாம். இவை பற்றிய பல பயனுள்ள தகவல்களைக் கீழே காணலாம்.

## உரம்



சமைத்த அல்லது சமைக்காத எல்லா வகையான உணவுப் பொருட்களையும், முட்டைக்கோது, கோப்பி, தேயிலை என்பவற்றின் அடையல்கள், காய்ந்த பூக்கள், தாவரங்கள், கிறிஸ்துமஸ் சவுக்கு மரங்கள், தோட்டக் கழிவுகள் (வைக்கோல், மரத்தூள்...). இறைச்சி, மீன் போன்ற கழிவுகளை உரமாகப் பாவிப்பதில்லை. ஆகவே, அவற்றை உரத்துக்குரிய பைகளில் இடுவதைத் தவிர்க்கவும்.

## காகிதத் தாள்கள்



பாவித்த அழுக்கடைந்த தாள்கள், அதாவது கழிவறைத் தாள்கள், உணவுப்பண்டங்களைப் பொதி செய்த தாள்கள் போன்றவை தவிர ஏனைய எல்லா வகையான காகிதத்தாள்களும் அடங்கும். காகித அட்டைப் பெட்டிகள் பிரத்தியேகமாக மறுசுழற்சி செய்யப்படும்.

## மின்கலங்கள், மின்குமிழ்கள், மருந்துகள்



நீங்கள் பாவித்த மின்கலங்கள், மின்குமிழ்கள், மருந்துகள் என்பவற்றை அருகிலுள்ள கடைகளிலும் மருந்துகளை மருந்துக்கடைகளிலும் ஒப்படைக்கலாம்.

## பிளாஸ்டிக் போத்தல்கள் (PET)




பிளாஸ்டிக் போத்தல்களின் மூடிகளைக் அகற்றிவிட்டு, போத்தல்களைச் சப்பளித்த பின் அவற்றை வர்த்தக நிலையங்களிலுள்ள விசேட கொள்கலன்களில் அல்லது உங்கள் வீட்டிற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் இடவும்.

## கண்ணாடிப் பொருட்கள்



கண்ணாடிப் போத்தல்கள், கண்ணாடிக் குவளைகள், பூச்சாடிகள் என்பவற்றை (வெள்ளை, பச்சை, கபிலம்) என்ற நிறங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றிக்குரிய பிரத்தியேக கொள்கலன்களில் இடவும்.

## அலுமினியம், இரும்புப் பொருட்கள்




குழாய்கள், தகரக் குவளைகள், அலுமினியத் தாள்கள், தயிர் மூடிகள், வேறு அலுமினிய இரும்புப் பொருட்கள் போன்றவை மீள்சுழற்சி செய்யப்படும்.

## துணிமணிகள்



பாவித்த துணிமணிகளைச் சேகரிப்பதற்காக உங்கள் அஞ்சல் பெட்டிகளில் இடப்படும் பிரத்தியேக பைகளில் அவைகளை இட்டு, அவற்றைச் சேகரிப்பதற்கென ஒதுக்கப்பட்ட நாட்களில் உங்கள்

வீட்டின் முன்னுள்ள நடைபாதையில் வைக்கலாம் அல்லது வீதிகளில் உள்ள பிரத்தியேக கொள்கலன்களில் போடலாம்.

## விசேட கழிவுகள்



வண்ணப்பூச்சு எச்சங்கள், இரசாயனக்கழிவுகள் (கைவேலை, தோட்டவேலை, சுத்திகரிப்புவேலை, ...) போன்றவற்றை வாங்கும் இடத்தில் ஒப்படைக்கலாம் அல்லது வீட்டுச் சிறப்புக்கழிவுகளைச் சேகரிப்பதற்கென உங்கள் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 பிராந்திய மையங்களில் ஏதாவது ஒன்றுடன் தொடர்பு கொள்ளலாம். இணையத்தள முகவரி : (www.ne.ch/dechets). Spéciaux des ménages என்ற பிரிவின் கீழே பார்க்கவும்.

## இந்தக் கழிவுகளை எங்கே போடுவது?

**அனைத்துக் கழிவுப்பொருட்களையும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட பிரத்தியேக கொள்கலன்களில் இடலாம்:** காகிதத்தாள்கள், அட்டைப்பெட்டிகள், பிளாஸ்டிக் போத்தல்கள், கண்ணாடி, அலுமினியம், கழிவு எண்ணெய், துணிமணிகள், இரும்புப்பொருட்கள்.

**கடைகளில் :** விளையாட்டுப்பொருட்கள், மின்சார, மின்னணு சாதனங்கள், மின்கலங்கள், மின்குமிழ்கள்.

**வீட்டுக்கழிவுகளை அகற்றுவதற்கான விசேட மையம்** : வீட்டுப் பாவனைப் பொருட்கள், தோட்டக் கழிவுகள், கைவேலைக் கழிவுகள்

## குப்பையிலிட வேண்டிய பொருட்கள்



வீட்டுக்கழிவுகள், மற்றும் வகையான போத்தல்கள், பொதி செய்யப் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் உறைகள், பழச்சாறுகள், செங்கற்கள், தூசி நிறைந்த பைகள், பூனை அழுக்குகள், அழுக்கடைந்த காகிதங்கள்.

வீட்டுக்கழிவுகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் (NEVA) குப்பைப் பைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களின் விபரங்கள்:

17 Litres - 1.00 CHF
35 Litres - 2.00 CHF
60 Litres - 3.40 CHF
110 Litres - 6.30 CHF

Neva நிறுவனத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட குப்பைப் பைகளை வழக்கமான கடைகளில் வாங்கலாம்.

## மேலதிக தகவல்களுக்கான இணையத்தள முகவரி:

Ville de Neuchâtel: http://www.2000neu.ch
Ville de La Chaux-de-Fonds: http://www.letri.ch
Ville du Locle: http://www.lelocle.ch
Pour les autres communes, s'adresser directement aux bureaux communaux.
Canton de Neuchâtel: http://www.ne.ch/environnement/dechets

## Val-de-Travers/La Côte-aux-Fées/ Les Verrières et La Brévine

வீட்டுக்கழிவுகளை தரம் பிரிப்பதற்கான வரிப் பணமானது எடை அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு : contrôle des habitants (032/ 886 43 00) ou aller sur : www.val-de-travers.ch